சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சைவம்

மலர் 1.] || இராக்ஷச௵ ஐப்பசி௴ 1915௵ அக்டோபர்௴ || [இதழ் 10.

**கைலைபாதி காளத்திபாதியந்தாதி.**

*உலக மனைத்தினுக்கு மொண்ணுதன்மே லிட்ட*
*திலக மெனப்பெறினுஞ் சீசீ—யிலகியசீர்*
*ஈசா திருக்கயிலை யெம்பெருமா னென்றென்றே*
*பேசா திருப்பார் பிறப்பு.*

## தாருகவனமுனிவர் சரித்திரம்.

முற்காலத்தில் இப்பரதகண்டத்தில் தாருகவனம் என்னும் விசாலமான ஒருவனமிருந்தது. அதில் நாற்பத்தெண்ணாயிரம் முனிவர்கள் வசித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்குக் கடவுள் ஒருவர் உண்டு என்பதில் நம்பிக்கையில்லை. அவரவர்கள் செய்யும் நல்வினை தீவினைகளுக்கேற்றவாறு அவரவர்களுக்கு இன்பதுன்பங்கள் தாமே உண்டாகின்றன என்பதும், தவம் வேள்வி முதலிய சற்கருமங்களால் முத்தியுண்டாகும் என்பதும், உயிர்களுக்கு வினைப்பயன்களை ஊட்டுவித்தற்கு ஒரு கர்த்தா வேண்டுவதில்லை யென்பதும் அவர்களுடைய கொள்கைகளாயிருந்தன. ஆதலால், அவர்கள் கடவுள் வழிபாடின்றி மிகவும் அரிய விரதங்களை யநுஷ்டித்துக் கொண்டும் தவங்களையும் யாகங்களையுஞ் செய்துகொண்டும் தங்களினும் தவத்தினின் மிக்கார் வேறொருவருமில்லை யென்று இறுமாப்புற்றிருந்தார்கள். அவர்களுடைய மனைவிமார்களும் தங்கள் கணவரைப்போலவே கடவுள்வழிபாட்டைக் கைவிட்டு, தங்களினுங் கற்பிற் சிறந்தார் வேறெங்குமில்லை யென்று கர்வித்திருந்தார்கள். அகரமென வறிவாகி எங்கும் நிறைந்து நிற்கும் சிவபெருமானார் இதனை யுணர்ந்து, அவர்கள் கர்வத்தை யடக்குமாறும், செய்வினையும் செய்

வினையின் பயனும் ஜடப்பொருள்களாதலினால் அவை தாமே ஆன்மாக்களைச் சென்றடையா வென்பதையும், செய்விப்பானும் வினைப்போகங்களை உயிர்களுக்கு ஊட்டுவிப்பானும் தாமே யென்பதையும், தம்மிடத்தன்பிலார் செய்யும் புண்ணியச்செயல்களும் பாவச்செயல்களாய் முடியும் என்பதையும், அம்முனிவர்களே யன்றி யேனையோரும் உணர்ந்து தம்மை வழிபட்டு உச்சீவிக்குமாறும் திருவுள்ளங்கொண்டருளி, திருமால் தம்மிடம் வரும்படிச் சங்கற்பித்தருளினார். அதனையுணர்ந்த திருமால் திருக்கைலையை யடைந்து இறைவனை ஆராவன்புடன் அருச்சித்து நிற்றலும், இறைவனார் அவருக்குத் தாம் கொண்ட எண்ணத்தைத் தெரிவித்து, அவரை யழைத்துக்கொண்டு திருக்கைலையை விட்டு நீங்கி, அவரை அவருடைய இயற்கையான பூர்வபெண்ணுருவத்தைக் கொள்ளும்படிக் கட்டளையிட்டருளினார். திருமாலும் அவ்வண்ணமே இறைவனாரின் திருவருளால் இலக்குமியுங் காணில் காமுறும்படியான மோகினிப் பெண்ணுருவங்கொண்டனர்.

### திருநேரிசை.

எரியலா லுருவ மில்லை யேறலா லேற மில்லைக்
கரியலாற் போர்வை யில்லைக் காண்டகு சோதி யார்க்குப்
பிரிவிலா வமரர் கூடிப் பெருந்தகைப் பிரானென் றேத்தும்
அரியலாற் றேவி யில்லை யையனை யாற னார்க்கே.

### மதுரைக்கலம்பகம்.

மேதகைய பலகலைபோர்த் தறம்வளருந் தமிழ்க்கூடல்
விகிர்த கேண்மோ
வேதமினின் றிருவுருவொன் றீருருவாய் நின்றதினு
மிறும்பூ தந்தோ
போதலர்பைந் துழாய்ப்படலைப் புயல்வண்ணத் தொருவனிரு
பூவை மார்க்குக்
காதலனாய் மற்றுனக்கோர் காதலியாய் நிற்பதொரு
காட்சி தானே.

சிவபெருமானார், சகலமாயையையும் தன்னிடத்தினின்றுந் தோற்றுவிக்கும் உமாதேவியாரும் காணில் காமுறும்படியாக அழகெல்லாந்திரண்டு ஓர் உருக்கொண்டாலென, ஒருகையில் சூலமும் மற்றொருகையில் பிட்சாபாத்திரமும் ஏந்தி நிருவாணமான காளைவடிவாய் எழுந்தருளினார். அவ்வாறெழுந்தருளிய இறைவனாரைக்கண்டு விஷ்ணுமூர்த்தியும் மாலாயினரெனில் அவ்விறைவனார் கொண்ட

கோலத்தைக்கண்டு யார்மயங்காதிருப்பர் !. இறைவனும் திருமாலும் இவ்வாறு திருவுருக்கொண்டதும், இறைவனார் திருமாலை நோக்கி, "விண்டுவே, நீ தாருகவனத்தை யடைந்து அங்கே நம்மை வணங்காமல் அகங்கரித்திருக்கின்ற முனிவர்களையெல்லாம் மயக்கி அவர்களுடைய விரதங்களை யழித்துவிட்டுவா" என்றேவினார். மோகினிவடிவங்கொண்ட திருமால் அவ்வாறே அம்முனிவர்களின் இருக்கையை யடைந்து, நாற்பத்தெண்ணாயிரம் மன்மதர்கள் கூடி நாற்பத்தெண்ணாயிரம் பஞ்சபாணங்களைத் தொடுத்ததுபோல் தமது இருவிழிக்கணைகளைப் பரப்பி நின்றனர். முனிவர்களனைவரும் அவ்வம்பேருண் கண்ணுக்கழிந்த நெஞ்சினராய், தாங்கள் செய்து கொண்டிருந்த தவம் வேள்வி முதலியவற்றை யெல்லாம் விடுத்து விளக்கைக்கண்ட விட்டிற்பூச்சிகளைப்போல் மோகினியைச் சூழ்ந்து கொண்டார்கள்.

**கந்தபுராணம்.**

ஆலமார் கண்டத் தெந்தை யருளினன் மாயோன் கொண்ட
கோலமார் வடிவ மெல்லாங் குறிப்புட னோக்கி நோக்கிச்
சீலமா மனத்தும் வீட்டிச் செழுஞ்சுடர் மலர்ச்சி கண்ட
வேலமார் வீட்டி லென்ன வொல்லென வந்து சூழ்ந்தார்.

அவ்வாறு சூழ்ந்துகொண்ட முனிவர்கள் ஒவ்வொருவரும் தங்களை முற்றிலும் மறந்து இமையாநாட்டம் பெற்றவர்களென இமைகொட்டாமல், மோகினியின் ஒவ்வொரு அவயவத்தின் அழகையும் உற்றுப்பார்த்துப் பார்த்துப் பலவாறாக எடுத்துப் புகழ்ந்து தோத்திரஞ் செய்வாராயினர். சிலர் மோகினியின் நறுமணங்கமழுங் கூந்தலைப் பார்த்து "இவள் சிரத்திலிருப்பது மேகமோ! அல்லது இருட்கூட்டமோ! அல்லது நெடியசைவலமோ!" என்றார்கள். சிலர் அவள் நெற்றியைப்பார்த்து "இளம்பிறையும் இந்திரதனுசும் இவள் நெற்றிக்கு ஒப்பாகாமையால் நாணமுற்று ஆகாயத்தில் மறைந்தும் வெளிப்பட்டுந் திரிகின்றனபோலும்!" என்றார்கள். சிலர் அவள் கண்களைப் பார்த்து, "அழகியமாவடு, அம்பு, நீலோற்பலம், வாள், வேல், கயல், சேல் என்னும் இவைகளுள் எதுவும் இவள் கண்களுக்கு ஒப்பாகாது. இவள் கண்கள் நமது உயிரை வாட்டுதலால் பாற்கடலிற்றோன்றிய ஆலகாலவிஷம் ஒருசிறிது ஒப்பானால் ஆகலாம்" என்றார்கள். சிலர் அவள் மூக்கைப்பார்த்து "இவள் நாசிக்கு எள்ளின்பூ, ஒந்தி, சண்பகவரும்பு, குமிழம்பூ ஆகிய இவைகளுள் எதுவும் ஒப்பாகாது," என்றார்கள். அவளுடைய அதரத்தைப்

பார்த்த சிலர் " இவள் இதழுக்குக் கொவ்வைக்கனியை யொப்பாகச் சொல்லலாமெனில், இதில் பானம்பண்ணுவதற்கு அமிர்தம் இருக்கிறது. அக்கனியில் இவ்வமிர்தமில்லை. ஆதலால், கொவ்வைக் கனியும் இவள் இதழுக்கு ஒப்பாகாதெனில் இதனோடு உவமித்துக் கூறுவதற்கு வேறுபொருளில்லை" என்றார்கள். அவள் பற்களைக் கண்ட சிலர் " இவை முல்லையரும்போ! மயிலிறகினடியோ! குருந்த மலரோ! முத்தோ! நட்சத்திரங்களோ!" என்றார்கள். சிலர் "இவை யெவையுமன்று. நமக்குப் பார்க்கப்பார்க்கக் காமமும் இன்பமும் விளைத்தலால் இவை சந்திரகிரணங்களே யாகும்." என்றார்கள். சிலர் அவள் காதுகளைப்பார்த்து " இவள் காதுகளுக்குச் சிலர் அறியாமையால் கத்திரியையும், வள்ளைத்தண்டையும், மகரதோரணத்தையும், ஊசலசைவையும் ஒப்பாகச் சொல்லுவார்கள். அவைகளுள் ஒன்றும் ஒரு சிறிதும் ஒப்பாகாது. இவை பிரமதேவனாகிய கொல்லன்செய்த உயிரையழிக்குங் கருவிகளேயாகும்" என்றார்கள். சிலர் அவள் முகத்தைப்பார்த்து " சிலர் இவள் முகத்தைச் சந்திரனுக்கு ஒப்பாகச் சொல்லுவார்கள். அப்படிச்சொல்வது அறிவீனமாம். சந்திரன் இவள்முகத்தைப்போல் எப்போதும் ஒரேபடித்தாய் ஒளிவீசாமல் தேய்வதும் வளர்வதுமாயிருக்கிறது. ஆதலால் அது இவள் முகத்திற்கு ஒப்பாகாது. தாமரைமலரை ஒப்பாகக் கூறலாமோவென்று பார்த்தால், அதுவும் வாடிப்போம். அன்றியும், மலர்தலும் குவிதலுமாகிய இரண்டு குணங்களும் அதனிடத்தில் உண்டு. இவள் முகமோ அவ்வாறின்றி எக்காலத்தும் வாடாமல் இருப்பது. ஆதலால் தாமரையும் இவள்முகத்திற்கு ஒவ்வாது" என்றனர். சிலர் அவள் கழுத்தைப்பார்த்து " இவள் கழுத்தின் அழகைச் சங்குமுங் கமுகுங் கவர்ந்திருக்க அதனைப் புலவர்கள் இக்கழுத்துக்கொப்பாகக் கூறுவது வெறும் பொய், பொய். இப்படிப் பொய்பேசுவதனாலல்லவோ புலவர்கள் தரித்திரம்பிடித்துத் திரிகிறார்கள்" என்றனர். சிலர் அவள்கைகளைப்பார்த்து " இவள் கைகளுக்குக் காந்தள்மலரும் செந்தாமரை மலரும் ஒப்பாகா" என்றார்கள். சிலர் அவள் தனங்களைப்பார்த்து " இவள் கொங்கைகளுக்கு மலை, சொக்கட்டான்காய், கஞ்சமுகை, களிற்றுனைக்கொம்பு என்னும் இவைகளுள் எதுவும் தனித்தனியாய் நிகராகாது. மலைபோலுயர்ந்து, சொக்கட்டான்காய் போல் அழகாய்த்திரண்டு, இளநீரைப்போற் குளிர்ந்து, அமுதத்தை யுட்கொண்டு, யானைக்கோடுபோலக் குவிந்து, மன்மதனது கிரீடத்தைப்போல் மிக்க அழகடைந்துள்ள ஒருபொருளிருக்குமாயின் அது

இவள் கொங்கைகளுக்கு ஒப்பாகும்" என்றார்கள். சிலர் அவள் நாபிக்குமேலுள்ள உரோமரேகையைப்பார்த்து "இது, பிரமதேவன் இப்பெண்ணின் வடிவத்தையமைத்து முலைக்கண்ணை யமைக்கும் பொருட்டுக் கிண்ணத்தினின்றும் நீலநிறம்பொருந்திய எழுதுகோலைக் கையிலெடுத்தபோது அதிலிருந்து சிதறிய துளியின் ஒழுக்கோ!" என்று வியந்தனர். அவள் வயிற்றைப்பார்த்த சிலர் "திருமால் பள்ளிகொள்ளும் ஆலிலையும் இவள் வயிற்றுக்கொப்பல்ல" என்றார்கள். சிலர் அவள் இடையைப்பார்த்து, "இவள் இடையை மின்னற்கொடியென்று சொல்லுவோமாயின், அது தோன்றியவுடன் அழியும். ஆகாயமென்று கூறுவோமாயின் அதற்கு உருவமில்லை. கொடியென்றும் உடுக்கையென்றும் கழறுவோமாயின் அவை சிறந்த உவமைகளன்று. உண்டென்றும் இல்லையென்றுஞ் சந்தேகிக்கநின்ற ஒருபொருளுக்கு உவமானப்பொருளுமுளதோ! இல்லை! இல்லை!!" என்றார்கள். சிலர் அவள் தொடையைப்பார்த்து "இது வாழைத்தண்டோ! அல்லது யானைத்துதிக்கையோ!" என்றதிசயித்தார்கள். சிலர் அவள் முகம், கொங்கை, கை, கால், இவைகளைப் பார்த்து "தாமரை அரும்பாயிருக்கும்போது இவள் கொங்கைகளுக்குத் தோற்று, மலர்ந்த பின்னும் இவள் முகத்திற்குங் கைகால்களுக்குந் தோற்று, இவ்வவயவங்களுக்கு ஒப்பாகவேண்டுமென்று விரும்பி நீரில் நின்று தவஞ்செய்தும் பிரயோசனப்படாமல் * பங்கமுற்றது போலும்" என்றார்கள். அவள் பாதத்தைப் பார்த்தவர்கள் "இப்பெண்ணினது பாதங்கள் செம்பஞ்சு, அனிச்சமலர், அன்னத்தூவி முதலிய மிருதுவான பொருள்கள் பட்டாலும் வருந்திச் சிவக்குந் தகையனவாம். இவை நாம் இதுவரையில் செய்த தவப்பயனால் நம் பொருட்டு இக்கடினமான தரையில் நடக்கின்றனபோலும்" என்றார்கள். சிலர் "இவள் பிரமனால் படைக்கப்பட்டவளல்லள். இவள் அவனால் படைக்கப்பட்ட திலோத்தமையைக்காட்டிலும் ஆயிரமடங்கு வனப்புவாய்ந்திருத்தலினால், அவன் இவளைப்படைத்திருந்தால், அவளைப்படைத்தபோது அவளைப்பார்க்க நான்கு தலைகளைக்கொண்டதுபோல், இவளைப்பார்க்க ஆயிரந்தலைகளைப்பெற்று இவள்பின்னே திரிவான்" என்றார்கள். இவ்வாறு முனிவர்களனைவரும் காமக்கடலில் வீழ்ந்து மோகினியின் மயக்கவலையிற் சிக்கி, அவளைப் பலவாறாகப் புகழ்ந்து, அறிவிழந்து, உயிர்கலங்கி, காந்தத்தினைத் தொடர்ந்து செல்லும் இரும்பென மோகினியைப் பின்தொடர்ந்து சென்றார்கள்.

* பங்கம் என்பது அவமானம் எனவும் சேறு எனவும் பொருள்படும்.

பிட்சாடன கோலங்கொண்ட சிவபெருமானார், திருமாலை முனிவர்களிடம் ஏவியபின், அம்முனிவர் வீடுகளிருக்கும் வீதிகளிற் சென்று வேதகீதம்பாடிக்கொண்டே பிச்சையேற்கத்தொடங்கினார். பாடன் மறையுந்தெளியாப்பரமர் பாடியகீதத்தை முனிபன்னியர் கேட்டு அதிசயமடைந்து அவ்விசைவயப்பட்டு, இவ்வாறு பாடுபவர் யார் ? என்று ஆச்சரியத்தோடுவீதியில் வந்து பார்க்க, இறைவனைக்கண்டு காமவெள்ளத்தில் மூழ்கி அவரையணைய ஆவல் கொண்டனர். சிலமாதர் " இத்தவசியின் உடலில் யாதொரு ஆபரணமும் இல்லாவிட்டாலும் இவருடைய இனிய பாடலே நம்மைக் காமக் கடலில் ஆழ்த்திவிட்டது. ஆதலால், இவர் வடிவம் மானிடவடிவமன்று, மாயவடிவமேயாகும்" என்றார்கள். சிலபெண்கள் " இவர் பிச்சையெடுக்க வந்தவரன்று, நம்மை மயக்கவந்தவர்" என்றார்கள். சில அரிவையர்" " இவரை ஆடையாபரணங்களணிவித்து அணையவரில்லையோ" என்றனர். சில நங்கைமார் பிச்சையிடுவார் போல் வந்து, விரகதாபத்தால் மெலிந்து கைவளையல்களும் ஆடைகளும் சோர்ந்துவிழ அதனைக்கண்டு நாணமும் அச்சமுங்கொண்டு, கைந்நெரித்துக்கொண்டு உள்ளே யோடிப்போனார்கள். சில மடந்தையர் அவரைப்பார்த்த கண் வாங்காதவராய்ப் பார்த்துக்கொண்டே அவருக்குப் பிச்சையிடுவார்போல் வந்து தாங்கள் கொண்டுவந்த அன்னத்தை அவர் பாத்திரத்திலிடாமல் வெளியிற் சிந்திக்கலங்கினார்கள். சில காரிகைமார் அவரை நோக்கி "ஐயா, எம்மிடத்தில் தேவாமிர்தத்தினும் இனிய போசனம் இருக்கிறது. அதை இவ்விடம் வந்துபுசித்துச் சற்றுநேரம் இருந்துபோகலாம்" என்றார்கள். சில தெரிவைமார் ஐயா, உமக்கேன் இந்தச் சூலமும் மண்டையோடும். தினந்தோறும் எம்மிடம் வந்து நெய்யும்பாலுமாகச் சாப்பிட்டிரும்" என்றார்கள். சில வனிதையர் அவரை வணங்குவதுபோல் அவருடைய திருவடிகளைத்தீண்ட முயன்றார்கள். இவ்வாறு இவர்களியாவரும் நெருங்கி, காமத்தீயால் உடல் மெலிந்து, மனந்தளர்ந்து, ஆவிசோர்ந்து, ஆடையவிழவும், வளையல் சிந்தவும், ஆபரணங்கள் கழலவும் நாணமுதலிய நற்குணங்கள் நீங்கி உயிரொன்று மாத்திரம் தாங்கி வித்தின்றி விளைவுசெய்யவல்லவராகிய இறைவனைப் பின்தொடர்ந்து சென்று கருப்பமுற்று அப்போதே நாற்பத்தெண்ணாயிரம் பெண்களும் நாற்பத்தெண்ணாயிரம் புத்திரர்களையீன்றார்கள். அப்புத்திரர்களனைவரும் சிவபிரானிடம் வந்து வணங்கி நிற்க, பிரானார் அவர்களைத் தம்மிடத்தன்புபூண்டு தவஞ்செய்து

கொண்டிருக்கும்படி கட்டளையிட்டு, காமவெள்ளத்தில் மூழ்கிய பெண்களாகிய கடல் வெள்ளம் தம்மைத்தொடர்ந்துவர அவர்களிருந்த நகரைவிட்டு, மோகினிவடிவங்கொண்ட திருமால் முனிவர்களோடு திரும்பிவரும் வழியை நோக்கிச்சென்றனர்.

(இன்னும் வரும்.)

---

## கடவுளுக்கும் இன்பதுன்பங்கள் உண்டா ?

நம்முடைய சமய நூல்கள் சிலவிடங்களில் கடவுள் இன்பமே வடிவமாக இருக்கிறார் என்கின்றன. சிலவிடங்களில் அவருக்கு இன்பதுன்பங்களில்லை என்கின்றன. சிலவிடங்களில், அவருக்கு இன்பதுன்பங்கள் உண்டு, ஆதலால் அவரைப் பூசிப்பவர்களை அவர் நேசிக்கிறார் எனவும், பூசிக்காதவர்களை வெறுக்கிறார் எனவும் கூறுகின்றன. இவைகளை வாசிப்போர் சிலர் இவை யொன்றோடொன்று முரணுவதாக மயங்காநிற்பர். சிலர் கடவுளுக்கு இன்பதுன்பங்கள் உண்டு என்பதும், அவரைப் பூசித்தால் அவருக்குப் பிரீதியும் பூசிக்காவிட்டால் வெறுப்பும் உண்டாகும் என்பதும் அறிவீனமாமெனக்கூறி, கடவுள் வழிபாட்டைக் கைவிடுவர். சித்தாந்தஞான நூல்களை ஆராய்ச்சிசெய்யாதவர்களே இவ்வாறு மயங்கி இடருறுவர். ஆராய்ச்சிசெய்வார்க்கு அவையனைத்தும் உடன்பாடேயாயிருக்கும்.

கடவுளுக்குச் சொரூபஇலக்கணம் தடத்த இலக்கணம் என இருவகையான இலக்கணங்களுண்டு. இவற்றுள் சொரூப இலக்கணமாவது அவர் குணங்குறிகளின்றி பேரறிவு, பேரின்பம், பேரருள் ஆகிய இவைகளேயாயிருக்கும் நிலையாகும். தடத்த இலக்கணமாவது அவர் உயிர்கள்மீது வைத்த இயற்கைத் திருவருளையே திருமேனியாகவும் குணங்களாகவும் தொழில்களாகவும் கொண்டுநின்ற நிலையாகும். சித்தாந்த நூல்கள் அவருடைய சொரூப இலக்கணத்தைக் கூறுமிடத்து அவர் இன்பமுந் துன்பமுமில்லாதவர் என்று கூறும். தடத்த இலக்கணத்தைக் கூறும்போது அவர் இன்பமுந் துன்பமுமுடையவர் என்று கூறும். இவ்விருவகை இலக்கணமும் அவருக்கு எக்காலத்திலும் இருப்பதனால் தமிழ்வேதம் அவரை "இன்பமுந் துன்பமும் இல்லானே யுள்ளானே" என்று தோத்திரஞ்செய்தது. ஆனால், அவருடைய சொரூப இலக்கணத்தைக் கூறும்போது அவர் குணங்குறி யொன்றுமில்லாதவர் என்று சொல்லிவிட்டு, அதனோடு அவர் இன்பமயமாயிருப்பவர் என்பது ஒன்றோடொன்று

மாறுபடாதோவெனில், மாறுபடாது. அவருடைய இயற்கையுருவமெனக் கூறப்படும் இன்பமானது உயிர்கள் வினைக்கீடாக அனுபவிக்கும் சடரூபமாகிய இன்பத்தைப்போல்வதன்று. அது இன்பமும் துன்பமும்அற்ற நிலையாகும். அது ஞானமயமாகவும் அருள்மயமாகவும் இருப்பது. அவ்வின்பம் வேறு அவர்வேறு என்று சொல்லப்படாமல் அவ்வின்பமே அவர், அவரே அவ்வின்பம் என்று சொல்லப்படுவது. அது எல்லையற்றது. தோற்றமும் ஈறும் இல்லாதது. சுட்டுணர்வுக்கெட்டாதது.

**பட்டணத்தடிகள்.**

அடிசார்ந்த வர்க்கு முடியா வின்ப
நிறையக் கொடுப்பினுங் குறையாச் செல்வ
மூலமு நடுவு முடிவு மிகந்து
கால மூன்றையுங் கடந்த கடவுள்
உளக்கணுக் கல்லா தூன்கணுக் கொளித்துத்
துளக்கற நிமிர்ந்த சோதித் தனிச்சுடர்
எறும்புத் துளையி னிருசெவிக் கெட்டா
துறுப்பினின் றெழுதரு முள்ளத் தோசை
வைத்த நாவின் வழிமறுத் தகத்தே
தித்தித் தூறுந் தெய்வத் தேறல்
துண்டத் துளையிற் பண்டை வழியன்றி
யறிவி னுறு நறிய நாற்றம்.

* * * *

தடத்த நிலையில் அவர் இன்பதுன்பங்களையுடையவராயிருத்தலும் அவர்பொருட்டன்றி ஆன்மாக்கள் பொருட்டேயாம். எல்லா உயிர்களும் அவருடைய சரீரங்களாயிருத்தலால், அவர் இயங்க எல்லாவுயிர்களும் இயங்கும். அவர் இன்புற எல்லாவுயிர்களும் இன்புறும். அவர் போகியாயிருக்க எல்லாவுயிர்களும் போகத்தை நுகரும். அவர் யோகியாயிருக்க உயிர்கள் யோகமுத்திபெறும். ஆதலால் அவர் உமாதேவியாரை விட்டுப் பிரியாத போகரூபியா யிருப்பினுமிருப்பர். சின்முத்திரை தாங்கி யோகுசெய்திருப்பினும் இருப்பர். பிரமாதிதேவர்களுக்கு அவர்கள் பதவியைக்கொடுத்தும் நீக்கியும் அருள்புரியும் தேவதேவராய் அரசுவீற்றிருப்பினும் இருப்பர். மண்டையோட்டை மலர்க்கையிலேந்தி பிச்சையெடுத்துண்ணுங் கோலத்துடன் இருந்தாலும் இருப்பர். அவர் கற்பனைகடந்த தற்பரம்பொருளாகையால் அவர் எந்நிலையிலிருந்தாலும் " இந்திரசாலம் புரிவோன் யாவரையும் தான் மயக்குந் தந்திரத்திற் சாராது சார்வதுபோல் " சிறிதும் தாக்கற்றுநிற்பர்.

### சிவஞானசித்தியார்.

போகியா யிருந்து யிர்க்குப் போகத்தைப் புரித லோரார்
யோகியா யோக முத்தி யுதவுத லதுவு மோரார்
வேகியா னாற்போற் செய்த வினையினை வீட்ட லோரார்
ஊகியா மூட ரெல்லா மும்பரி லொருவ னென்பர்.

### திருவாரூர் நான்மணிமாலை.

ஆமையோ டணிந்து தலையோ டேந்தி
காமரு மடந்தையர் கடைதொறுங் கடைதொறும்
பலிதேர்ந் துண்ணினு முண்ணு மொலிகழற்
பைந்துழாய் முகிலும் பழமறை விரிஞ்சனு
மிந்தி ராதியரு மிறைஞ்சினர் நிற்ப
மற்றவர் பதங்கண் மாற்றியும் வழங்கியும்
பற்றலர்ச் செகுத்து முற்றவர்த் தாங்கியும்
பரசுநர் பரசப் பணிதுநர் பணிய
வரசுவீற் றிருப்பினு மிருக்கு முரைசெயின்
யோக சாதனம் போகிகட் கின்மையிற்
செஞ்சடை விரித்து வெண்பொடி பூசி
யெருக்கங் கண்ணியுஞ் சூடி விருப்புடை
யிடப்பான் மடந்தை நொடிப்பொழ்து தணப்பினு
மடலூர் குறிப்புத் தோன்ற விடலரும்
காமமீ துரவே முற்றிருந்தவ
டாமரைச் சீறடி தைவந் தம்ம
புலவியிற் புலந்துங் கலவியிற் களித்தும்
போகமார்ந் திருப்பினு மிருக்கும் யோகிகட்
கெய்தா வொண்பொருள் கைவந்து கிடைப்ப
ஞான முத்திரை சாத்தி மோனமோ
டியோகுசெய் திருப்பினு மிருக்கு மீகெழு
தபனிய மாடத் தரமிய முற்றத்
தைங்கணைக் கிழவ னரசிய னடாத்தக்
கொங்கைமால் களிறுங் கொலைக்கண்வாட் படையுஞ்
சில்கா ழல்குல் வெல்கொடித் தேரும்
பல்வகை யுறுப்பும் படையுறுப் பாகப்
பவக்குறும் பெறியுந் தவக்குறும் பெறிந்து
நுணங்கிய நுசுப்பி னணங்கனார் குழுமிக்
கைவருத் திருந்து கழங்கெறிந் தாட
மையுண் கண்கண் மறிந்தெழுந் தலமரல்
செம்முகத் தாமரைச் சிறையளிக் குலங்க
ளம்மென் காந்தளி னளிக்குல மார்த்தெழக்

கலந்துமன் றழீஇக் காமுற ளிகர்க்கும்
பொலன்செய் வீதிப் பொன்மதிற் கமலை
யண்ணை் மாநகர்க் கண்ணுதற் கடவுள்
கற்பனை கழன்று நிற்றலி
னிற்பதிக் கிலையெனு நியமமோ வின்றே.

அன்றியும், அரசன் சிட்டர்களை விரும்பியாதரிப்பதும் துட்டர்களைவெறுத்துத் தண்டிப்பதும் செங்கோன்முறைமையாவது போலவும், பிதாதன்சொற்படி நடக்கும் பிள்ளைகளிடத்தில் அன்பு கூர்தலும், சொல்வழிவாராத பிள்ளைகளைத்தண்டித்தலும் கடமையாவது போலவும், சர்வான்மாக்களுக்கும் இறைவராகவும் பிதாமாதாக்களாகவும் இருக்கும் கடவுள் அவர்கள் உய்யும் பொருட்டுத்தாம் திருவாய்மலர்ந்தருளிய வேதாகமநெறியில் ஒழுகுவாரை விரும்பியருள் சுரத்தலும், அந்நெறியினின்றும் விலகித்தீநெறியில் ஒழுகுவாரை வெறுத்து நிரயங்களிற் செலுத்தித் தண்டனைபுரிதலும் முறைமையாகும். அவர் நல்லாரை யளித்தலும், தீயாரைத்தண்டித்தலும் ஆகிய இரண்டு தொழில்களும், ஒன்றுக்கொன்று மாறுபாடான விருப்பு வெறுப்பு என்னும் இருவேறு குணங்களால் உண்டாவனவாகக்காணப்படினும், அவ்விரண்டும் அவருடைய கருணையின்விளைவேயன்றி வேறன்று. ஆதலால் அவர் தம்மை நேசியாதவரை வெறுத்துத்தண்டித்தல் அவருடைய மறக்கருணையென்றும், அவரை நேசிப்பாரை நேசித்து அருள்புரிதல் அவர் அறக்கருணையென்றும் சொல்லப்படும். அவருடைய அருட்சத்தியொன்றே இவ்வாறு அறக்கருணை மறக்கருணையென இருவகைப்பட்டு ஆன்மாக்களைப் பரிபாகப் படுத்திக்கொண்டிருக்கும்.

திருவாசகம்.

நன்றாக நால்வர்க்கு நான்மறையி னுட்பொருளை
யன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் காணேடீ
யன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தா னாயிடினுங்
கொன்றான்காண் புரமூன்றுங் கூட்டோடே சாழலோ.

அவர் தம்மை வணங்காதாரைத் தண்டித்தலும் அவர்களை நல்வழிப் படுத்தற்கே யாதலினால் பெரியோர்கள் அவருடைய அறக்கருணையைப்போலவே மறக்கருணையையும் வேண்டித்துதித்தார்கள். நமது மாணிக்க வாசகப்பிரான் "உடையாய் கூவிப்பணிகொள்ளா தொறுத்தாலொன்றும் போதுமே" என்று மறக்கருணை கிடைத்தாற் போதும் என்றனர்.

## போற்றிப்பஃறொடை.

நஞ்சனைய சிந்தை நமன்றூதர்—வெஞ்சினத்தா
லல்ல லுறுத்து மருநரகங் கண்டுநிற்க
வல்ல கருணைமறம் போற்றி.

சூரியன் எல்லாப்பொருள்களிடத்திலும் ஒரே விதமாய் ஒளி வீசிக்கொண்டிருந்தாலும், அதனைச் சமீபித்துள்ள பொருள்களே தூரத்திலுள்ள பொருள்களைக்காட்டிலும் அதனொளியையும் வெப்பத்தையும் அதிகமாகப்பெறுகின்றன. வெயிலிலிருக்கும் பூண்டு செழித்து வளர்வதுபோல் இருட்டிலிருக்கும் பூண்டு வளர்வதில்லை. அதுபோல் வழிபாட்டின் திறத்தால் மனிதர்கள் கடவுளுக்கு எவ்வளவு சமீபத்திலிருக்கிறார்களோ அவ்வளவு அவரருளுக்குரியராகின்றார்கள். சரியையென்னும் மார்க்கத்தினும் பார்க்கக்கிரியாமார்க்கம் அவருக்குச் சமீபமாயுள்ளது. கிரியாமார்க்கத்தினும் யோகமார்க்கம் அவருக்கு அதிக சமீபமாயுள்ளது. ஞானமார்க்கம் அவர் இருப்பிடமாயுள்ளது. ஆதலால் சரியையாளரைக்காட்டிலும் கிரியையாளரும், கிரியையாளரைக்காட்டிலும் யோகிகளும், யோகிகளைப்பார்க்கிலும் ஞானிகளும் கடவுளின் அருளுக்கு அதிகமாக உரியராகின்றனர். இம்மார்க்கங்களெவற்றினும் ஒழுகாதவர்கள் கடவுளுக்கு வெகு தூரத்திலிருப்பவர்களாய் அவரருளைப்பெறுதற்குரியராகார்.

## தேவாரம்.

எந்தையீசனெம்பெருமானேறமர்கடவுளென்றேத்திச்
சிந்தைசெய்பவர்க்கல்லாற்சென்றுகைகூடுவதன்றாற்
கந்தமாமலருந்திக்கடும்புனனிவாமல்குகரைமே
லந்தண்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே.

ஆனால், சூரியன் சடப்பொருளாகையாலும், அதற்குச் சர்வவியாபகமின்மையாலும், அதைச்சமீபித்துள்ள பொருள்களே அதன் ஒளியையும் வெப்பத்தையும் தூரத்திலுள்ள பொருள்களைக்காட்டிலும் அதிகமாகப்பெறும். கடவுள் ஞான மூர்த்தியாகவும், சர்வவியாபகராகவுமிருக்க, அவர் தம்மை வழிபடுவார்க்கு மாத்திரம் அருள்செய்து வழிபடாதார்க்கு அருள்செய்யாதொழிவது அவர்விருப்பு வெறுப்புடையாரென்பதைக் காட்டாதோவெனில், காட்டாது. சூரியன் ஒரேவிதமாய் ஒளி வீசும் ஓரிடத்திலுள்ள பலபொருள்களுள் சிலபொருள்கள் அதன் ஒளியையும் வெப்பத்தையும் அதிகமாகவும் சிலபொருள்கள் குறைவாகவும் கிரகிக்கின்றன. வாழைத்

தண்டின் மீதும் சூரிய காந்தக் கல்லின்மீதும் ஒரே விதமாய்ச் சூரியன் காய்ந்தாலும் வாழைத்தண்டு நெடுங்காலம் குளிர்ந்தேயிருக்கும். சூரியகாந்தக்கல்லோ உடனே அக்கினியைக் கான்று அடுத்துள்ள பொருள்களையும் கொளுத்தும். அதுபோல் கடவுளுடைய திருவருள் எல்லா உயிர்களிடத்தும் ஒரே அளவாக வியாபித்திருந்தாலும் அது பக்குவப்பட்ட ஆன்மாக்களிடத்தில் மாத்திரம் விரைவில் வெளிப்பட்டுப் பிரகாசிக்கும். ஆதலால் பக்குவப்படாத ஆன்மாக்கள் அவரருள் வெள்ளத்தின் நடுவிலிருந்தும், ஆற்றுவெள்ளத்தின் நடுவிலிருந்தும் தாகத்தால் நாவறண்டு தபிப்பான்போல், அவரருளாரமுதைப் பருகமாட்டாமல் வருந்துவர். அங்ஙனம் வருந்துதல் கடவுளின் குற்றமன்று; ஆன்மாக்களிடத்தில் அனாதியாகவே பொருந்தியுள்ள குற்றமேயாம்.

### தேவாரம்.

சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலா
னலமில னுடொறு நல்கு வானலன்
குலமில ராகிலுங் குலத்திற் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே.

### திருவருட்பயன்.

நலமில னண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலமிலன் பேர் சங்கரன்.

### திருவிடைமருதூர் மும்மணிக்கோவை.

*    *    *    *    *
பூவலர் குடுமிச் சேவலம் பதாகை
மலைதுளை படுத்த கொலைகெழு கூர்வே
லமரர்த் தாங்கும் குமரன் றாதை
பொருதிடங் கொண்ட பொன்னி புரக்கு
மருதிடங் கொண்ட மருத வாண
நின்னது குற்ற முளதோ நின்னினைந்
தெண்ணருங் கோடி யிடர்ப்பகை கடந்து
கண்ணுறு சீற்றத்துக் காலனை வதையா
திறப்பையும் பிறப்பையு மிகந்து சிறப்பொடு
தேவ ராவின் கன்றெனத் திரியாப்
பாவிக ணமதே பாவம் யாதெனின்
முறியாப் பெறுக்கன் முப்பழங் கலந்த
வறுசுவை யடிசி லட்டினி திருப்பப்
புசியா தொருவன் பசியால் வருந்துத
லயினியின் குற்ற மன்றுவெயி லின்வைத்

தாற்றிய தெண்ணீர் நாற்றமிட் டிருப்ப
மடாஅ வொருவன் விடாஅ வேட்கை
தெண்ணீர்க் குற்ற மன்றுகண் ணகன்று
தேந்துளி சிதறிப் பூந்துணர் துறுமி
வாலுகங் கிடந்த சோலை கிடப்ப
வெள்ளிடை வெயிலிற் புள்ளிவெயர் பொடிப்ப
வடிபெயர்த் திடுவா னொருவ
னெடிது வருந்துத னிழற்றீங் கன்றே.

கடவுள் கொண்டருளும் எவ்வகைத் திருமேனிகளும் செய்தருளும் எவ்வகைத்தொழில்களும் அருட்டிருமேனிகளும் ஆனந்த வடிவங்களுமாகவே யிருக்கும். இதுபற்றியே ஞானநூல்கள் அவரை சச்சிதானந்த ரூபியென்று கூறும்.

சிவஞானசித்தியார்.

உருவருள், குணங்க ளோடு முணர்வருள், உருவிற் றோன்றும்
கருமமு மருள், அரன்றன் கரசர ணாதி சாங்கம்
தருமருள், உபாங்க மெல்லாந் தானருள், தனக்கொன் றின்றி
யருளுரு வுயிருக் கென்றே யாக்குவ னமல னன்றே.

சிற்றம்பலநாடிகள்.

ஆனந்த மேசெவி யம்புயத் தாளிணை யங்கைகளும்
ஆனந்த மேதிருக் கண்ணுஞ்செவ் வாயருண் மேனியெல்லாம்
ஆனந்த மேதிருச் சிற்றம் பலவ ரருட்பொருளும்
ஆனந்த மேயவன் றில்லையுங் காழியு மானந்தமே.

---

## சைவர்கள் பெரும்பாக்கியம்.

சிவஞானசித்தியார்.

நரர்பயில் தேயந் தன்னில் நான்மறை பயிலா நாட்டில்
விரவுதல் ஒழிந்து தோன்றல் மிக்கபுண் ணியந்தான் ஆகும்
தரையினின் கீழைவிட்டுத் தவஞ்செய்சா தியினில் வந்து
பரசம யங்கட் செல்லாப் பாக்கியம் பண்ணொ ணாதே.

இத்திருவிருத்தத்தால் அறிந்துகொள்ள வேண்டிய விஷயம் யாதெனின், எழுவகைத் தோற்றத்துக்குள்ளான எண்பத்துநான்கு லக்ஷம் பேதங்களாயிருக்கின்ற பிறவிகளில் மானுடப்பிறவியே மேலானதென்று அப்பிறப்பின் சிறப்பையும், இந்த எண்பத்துநான்குலக்ஷம் பேதப்பட்ட பிறவிகளோடுகூடிய உயிர்கள் தனித்தனியாகவும் கூட்டங் கூட்டமாகவும் பிரிந்தும் சேர்ந்தும் வாழ்கின்ற எண்ணிறந்த

தேசங்களில் மா நுடப்பிறவியுடைய நரர்கள் வாழப்பெற்ற தேசமே மேன்மையுடையதென்று தேசத்தின் மேன்மையையும், பலபாஷா ரூபங்களாய்ப் பரவிக்கிடக்கும் பலநூல்கள் பயின்றுவருவதாகிய பல நாடுகளில் நான்கு வேதங்கள் வழங்கப்பெற்ற நாடே புகழுடைய தென்று நாட்டின்புகழையும், புத்திபூர்வமாகவும் அபுத்திபூர்வமாக வும் மனவாக்குக் காயங்களால் செய்யப்பட்ட பலவகையான புண்ணி யங்களில் மேலே சொல்லிய வேதங்கள் வழங்கும் நாட்டில் பிறக்க வரும் புண்ணியமே நல்ல புண்ணியமென்று. புண்ணியத்தின் மிகு தியையும், அந்தந்தவுயிர்கள் அடைதற்குரிய கதிக்குத்தக்க தவங் களைச் செய்தற்கு வருணபேதங்கள் பலவகையாக ஏற்பட்டிருக்கின்ற படியால் தாழ்ந்த தவத்தைச் செய்தற்குரிய தாழ்ந்த சாதிகளில்வந்து பிறத்தலைவிட்டு உயர்தவஞ் செய்தற்குரிய உயர்ந்த சாதியரில் பிறக்க வருதலே பிறந்ததாமென்று சாதியின் விசேடத்தையும், அப்பிறவி பூர்வபுண்ணிய விசேடத்தால் கிடைக்கப்பெறினும் அப்பிறவியைக் கொண்டு செய்யப்படும் மேலான தவத்திற்குரிய மேலானசமயம் வாய்க்கப்பெறுதலே பாக்கியத்திற் சிறந்த பாக்கியமென்று பாக்கியத் தின் தகுதியையும் நன்கு விளக்கியதாமென்க.

இதனால் எதிர்மறையாக மறுக்கவேண்டியவற்றை மறுக்கவும் உடன்பாடாகக் கொள்ளவேண்டியவற்றைக் கொள்ளவுங்கூறியதே யன்றி சைவசமயந்தான் பாக்கியமாகிய சமயமென்றும் இச்சிறப் பாகிய பாக்கியம் கிடைக்கப்பெறும் வகையைச் செய்துகொள்ளல் எவ்வகைப்பட்ட வன்மையாளர்க்கும் அரிதினும் அரிதே என்றும் மறுத்து சைவசமயமே சமயமென்று சித்தாந்த முகத்தால் சித்தாந் தப்படுத்தியதுமாமென்க.

எதிர்மறையாக மறுக்கவேண்டுவன, நரர்பயிலாத தேசங்களும் நான்மறைபயிலாத தேசங்களும் சைவமொழிந்த பரசமயங்களுமா மென்க.

உடன்பாடாகக்கொள்ள வேண்டுவன, நரர்பயில் தேசங்களும் நான்மறைபயிலும் நாடுகளும் இவைகளைக்கூட்டி வைக்கத்தக்க புண்ணிய விசேடங்களும் பரசமயங்களில் செல்லாப் பாக்கியமு மாம்.

ஈண்டு இத்திருபாசுரத்தை எடுத்துக் காட்டியது என்றுக் கெனின், சைவசமயிகளாயுள்ள யாவரும் தமக்கு வாய்க்கப்பெற்ற சைவசமயமாகிய பாக்கியத்தைப் பாக்கியமாக எண்ணுது மறந்திருக் குந் தன்மையை நாடியேயாம்;

அஃதாவது சைவசமயம் விளங்கவேண்டுவது அச்சமயத்துக்குத் தெய்வமாயுள்ள சிவபெருமானால். அச்சிவபெருமான் விளங்கப்பெறுவது வேதாந்தத் தெளிவாகிய ஆகமசித்தாந்த சாஸ்திரங்களாலென்க. வேறு நூல்களைக் கூறுது ஆகமங்களைக் கூறுவானேனெனில், ஆகமம் முறையானே மூன்றுபதங்களைக் காட்டுகின்றமையாலென்க. அவை ஆ, க, ம, என்பனவேயாம். ஆ என்பது பாசம்; க என்பது பசு; ம என்பது பதி; ஆகவே முன்னே காணப்படுவது பிரபஞ்சம்; அதனைப்பாசமென்று அறிந்த பின்னர் ஜீவனுடைய விளக்கம் உண்டாகும். அவ்விளக்கத்தால் சீவனைப் பசுவென்றுணரவரும். அது வந்தபின்னர், இறைவன் ஒருவன் இருத்தல்வேண்டுமென்று யூகிக்கவரும். அந்தயூகத்தால் அவ்விறைவனுன் நமக்கும் யாவர்க்கும் பதியென்று துணிவாய் நிச்சயிக்கவரும். அத்திரிபதார்த்த நிச்சயத்தால் முத்தியுண்டாம். அம்முத்தியுண்மையும் ஆகமமென்னும் பெயரானே அறியக்கிடக்கின்றது.

எங்ஙனமெனின், திரிபதார்த்த நிச்சயத்தால் முன்னே ஒருபொருளுந் தோன்றுதிருக்கச் செய்த பாசம் நீங்க, அப்பாசநீக்கத்தால் சிவஞானசித்தியுண்டாய் அச்சித்தியால் முத்தியின்பம் உண்டாம் என்னும் உண்மைதோன்ற ஆ - சிவஞானம் க - மோக்ஷம், ம - மலநாசம் என்றும் பொருள்படுத்தி யிருக்கின்றனர். இவ்வரிய பொருளெல்லாம் உணர்த்துவதாகிய ஆகமசாஸ்திரவிசாரம் சைவசமயிகளாகிய நமக்கெல்லாம் அவசியம். அவ்வாகமசாஸ்திரம் வடமொழி தென்மொழிகளில் காணக்கிடக்கின்றது. ஆகமம் என்னும் பெயர் வடமொழியிலுள்ள காமிகாதி வாதுளாந்தமான இருபத்தெட்டுக்கும், தென்மொழியிலுள்ள சித்தாந்தமென்னும் பெயர் திருவுந்தியார் ஆதியாக சங்கற்பநிராகரணம் ஈறுகவுள்ள பதினுன்கு சாஸ்திரங்கட்கும் வழங்கிவருகின்றன.

இவ்வாறு இருவகைப்பெயரால் வழங்கிவரினும் திரிபதார்த்த இலக்கணமும் முத்திமுடிபும் இவையாமென உணர்த்துவது அந்த இருபத்தெட்டும் இந்த பதினுன்குமே யாகலான் இவையிரண்டையும் ஆகமமெனினும் சித்தாந்தசாஸ்திர மெனினும் ஒக்கும்.

இச்சித்தாந்த சாஸ்திரங்கள் தமது அறிவினுல் கற்றுணரும் எளியதன்மையை யுடைத்தானவைகளன்று. அவ்வகையாய் உணரத் தொடங்கின் அது "சாத்திரத்தையோதினர்க்குச் சற்குருவின் றன் வசன - மாத்திரத்தே வாய்த்தநலம் வந்துறுமே - ஆர்த்தகடல், தண்ணீர்குடித்தவர்க்குத் தாகந்தணிந்திடுமோ - தெண்ணீர்மையா யித

லேச் செப்பு" என்பதுபோலாமன்றி அறிவடங்கி அவ்வழியே நிற்குஞ் செயலைச்செய்ய மாட்டாது. ஆகலான் சிவதீக்ஷையுடையவர்களாய் குருபூசை சிவபூசை மஹேஸ்வரபூஜைகளை அன்புடன்செய்ய வல்லவர்களாயுள்ள நல்லோர்கள்பால் சென்று அவர்களை வழிபட்டு அவர்கள் வாயிலாய்க் கேட்டுச் சிந்திப்பதுவே ஆன்றோரது ஆட்சியாம்.

இவ்வருமையை யுணராதவர் குருபூஜையாதிகளைத் தாமும் விரும்பாமலும் சொல்வோராவது இவையுடையவராயிருக்கின்றனரா வென்று பாராமலும் ஏனைய நூல்களைப்போலவே இவற்றையும் மனம் போனவாறெல்லாம் கேட்டும் பிறர்க்குச் சொல்லியும் மகிழ்ந்து திரிந்துவருகின்றனர்.

ஆதலான் சைவசமயிகளாயிருக்கின்றவ ரெல்லாம் இந்நூல்களை ஓதாதவராயிருப்பாராயின் அவரெல்லாம் குருபூஜையாதி மூன்றிலும் ஆசையுள்ளவராய் ஓதிவரவும், ஓதிவந்தவரெல்லாம் ஐயந்தீர உணரும் வகையான் உணரவும், உணரவந்தவரெல்லாம் பிறர்க்குரையாது போதலொழிந்து பிறர்க்குரைக்கவும், பிறர்க்குறைக்கும் அவ்வளவி லொழியாது தாமும் அடங்கப்பெற்று ஒழுகவுமே ஒவ்வொரு திருக்கூட்டத்தவரும் முயற்சியுடையராயிருப்பின் வையகம் துயர்தீர்ந்து சிவபெருமானருளைப் பெற்றுய்யும்.

(இன்னும்வரும்.)

இங்ஙனம்:
ஸ்ரீமத் ஏகாம்பர சிவயோகிகள் அடித்தொண்டன்,
வைதிக சைவசித்தாந்தப் பிரசங்க ரத்னாகரம்
கா. ஆலாலசுந்தரம் பிள்ளை.

---

திருக்குறுந்தொகை.

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சம்
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர்த் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேனெடுங் காலமே.

சைவம் ஓங்குக — சிவனடியார் வாழ்க.

---